சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 393/2015**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைசாமி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 25.04.2023 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு ஏப்ரல் 25 ம் நாள் சாட்சியம்.

---

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டாரா என்றால் ஆமாம். ஆணையர் அறிக்கையில் கைசூளையோ அல்லது சூளை இருந்ததற்கான அடையாளமோ இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தற்போது தான் சூளை இல்லை முதலில் இருந்தது. சூளை தொழில் செய்வதை நிறுத்தி ஒரு வருடம் ஆகிறது. 2022 வரை தொழில் செய்ததற்கான தொழில் வரி பஞ்சாயத்தில் செலுத்தியுள்ளேன். அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய சொத்தும் பிரதிவாதி வாங்கிய சொத்தும் ஆதியில் பேச்சிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்.

2. நான் வாங்கிய சொத்து 77 1/2 செண்ட் மற்றும் பிரதிவாதி வாங்கிய சொத்து 77 1/2 செண்ட் விஸ்தீரணம் என்றால் ஆமாம். பேச்சிமுத்து பொது அதிகார முகவராக ரத்தினசாமி என்பவரை நியமனம் செய்து அவர் லட்சுமி என்பவருக்கு விற்பனை

செய்து அவரிடரிமிருந்து பிரதிவாதி கடந்த 17.07.2015 ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தின் சரத்துக்களை நான் படித்து பார்த்துள்ளனேன். எனது பூமியை ஒட்டி தென்புறமாக கிழமேலாக பைபாஸ் ரோடு செல்கிறது என்றால் ஆமாம். பைபாஸ் ரோடு எடுப்பதற்கு 7 செண்ட் நிலம் அரசாங்கத்தால் கையக படுத்தப்பட்டு அதற்காக இழப்பீடு தொகையை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான்.

3. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமியும் க.ச.எண். 266/3 என்றால் சரிதான். எனக்கு கையகப்படுத்தப்பட்ட பூமியை விடுத்து தற்போது 70 1/2 செண்ட் தான் பூமி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி பூமிக்கு செல்வதற்கு மேல்புறத்திலோ அல்லது கிழபுறத்திலோ வடப்புறத்திலோ தடம் இல்லை என்றால் சரியல்ல, என்னுடைய பூமிக்கு கிழபுறம் லட்சுமி வகையறா பிரதிவாதிக்கு தடம் விட்டு உள்ளார்கள், அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை தடம் விடப்பட்டுள்ள காலை எண் என்ன என்றால் தெரியாது. வழக்கிற்காக வேறு தடம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி வாங்கியதாக சொல்லும் ஆவணத்தில் 266/3 காலையின் கிழபுறத்தில் தான் சென்று கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது அவர்களே எழுதிக்கொண்டார்கள். வருவாய் ஆவணங்களையும் கிரைய ஆவணத்தையும் பார்த்து லட்சுமி எந்த காலையில் தடம் விட்டுள்ளார் என தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. 1991 ல் தங்கவேலிடமிருந்து பேச்சிமுத்து வாங்கிய ஆவணத்திலும் 266/3 காலையின் கிழபுறத்தில் தான் சென்று கொள்ளலாம் என எழுதப்பட்டுள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. தற்போது வரை எனது பூமிக்கு

வடபுறமாக உள்ள பிரதிவாதியின் 77 1/2 செண்ட் பூமிக்கு தடம் எந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. கிழமேல் பைபாஸ் ரோட்டை ஒட்டி எனது பூமி உள்ளது என்றால் ஆமாம். 30.09.2015 மற்றும் 09.10.2015 ம் தேதிகளில் என்னுடன் பிரதிவாதி தகராறு செய்தததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் என்னுடைய பூமியை பிரதிவாதியை கிரையம் செய்து கொள்ளுமாறு கேட்டு பிரதிவாதி மறுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய காலம் முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.